IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜாமணி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மொடக்குறிச்சியில் மஞ்சள் காட்டு வலசுவில் குடியிருந்து வந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். 2012 ஆண்டு மோகனசுந்தரம் என்பவர் என் லாரியில் நான்தான் டிரைவர் வேலை செய்து வந்தேன். பாலசுப்பிரமணியம் என்பவரை எனக்கு தெரியும். கிருஷ்ணன் என்பவரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை.வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.27 18:48:26 +0530

**அரசு தரப்பில்  குறுக்கு விசாரணை**

19.02.20212 தேதியன்று  மொடக்குறிச்சி கரியா கவுண்டன் வலசுவில் இயங்கி வரும், பாலசுப்பிரமணியன்  என்பவருக்கு சொந்தமான கிரி பிரசாத் டிரேடர்ஸ்  என்ற நிறுவனத்தில் இருந்து  பருத்திக்கொட்டை புண்ணாக்கு 68 மூட்டைகளை TN 36 22 59 என்ற வண்டியில் ஏற்றிக்கொண்டு கோயமுத்தூர் உக்கடத்தில் உள்ள கிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான கே ஆர் டிரேடர்சில் டெலிவரி செய்தேன் என்றால் சரியில்லை. மேற்படி சரக்கை கிருஷ்ணன் என்பவர் பெற்றுக்கொண்டு  அதற்கான தொகையை காசோலையாக கொடுத்து ஏமாற்றியுள்ளார் என்ற விவரத்தை பின்னிட்டு நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல.

மேற்படி சரக்குகளை அனுப்பியதற்கான கடிதத்திலும்,  இன்வாய்ஸ் பில்லிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சரக்குகளை கிருஷ்ணன் என்பவருக்கு நான்தான் லாரியில் எடுத்துச் சென்று  கொடுத்ததாகவு சரக்குகளை அனுப்பியதற்கான இன்வாய்ஸிலும் கையொப்பம் செய்ததாகவும் போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு பற்றி எதுவும் தெரியாது என எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–இல்லை

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.27 18:48:35 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW7

Name : மோகனசுந்தரம் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மொடக்குறிச்சியில் மஞ்சள் காட்டு வலசுவில் குடியிருந்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். 2012 ஆண்டு நான் டெம்போ வைத்து ராஜாமணி என்பவரை டிரைவர் ஆக வைத்து தொழில் செய்து வந்தேன். பாலசுப்பிரமணியம் என்பவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியாது. சண்முகம் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.03.2012 தேதியன்று ஈரோடு பார்க் ரோட்டில் உள்ள KA

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.01.27 18:49:03 +0530

முத்துசாமி மாவு மில் நிறுவனத்திலிருந்து அதன் உரிமையாளர் சண்முகம் அனுப்பிய 150 கிழங்கு மாவு மூட்டைகளை TN 28 C 3130 என்ற லாரியில் உக்கடத்தில் உள்ள கிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான கே ஆர் டிரேடர்ஸ்க்கு டெலிவரி செய்தேன் என்றால் சரியல்ல . பின்னிட்டு 29.04.2012 தேதி அன்று சண்முகத்திடம் இருந்து 138 மூட்டைகளை பெற்று லாரியில் கொண்டு சென்று உக்கடத்தில் உள்ள கிருஷ்ணர் என்பவருக்கு சொந்தமான கே.ஆர். டிரேடர்ஸ்க்கு டெலிவரி செய்தேன் என்றால் சரியல்ல.

மேற்படி சரக்குகளை கிருஷ்ணன் என்பவருக்கு லாரியில் எடுத்துச் சென்று கொடுத்ததாக போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு பற்றி எதுவும் தெரியாது என எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.27 18:49:10 +0530